**செய்தி வெளியீடு எண்: 246** **நாள்: 27.04.2013**

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

<u>வடசென்னை பகுதியில் தொழிலாளர் துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு</u>

தொழிலாளர் துறையை சார்ந்த சட்டமுறை எடையளவு அதிகாரிகள் 27.4.2013 அன்று சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரியின் தலைமையில் வடசென்னை பகுதியில் அமைந்துள்ள நைனியப்பன் தெருவில் உள்ள கடைகளில் கூட்டாய்வு மேற்கொண்டு சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின்படி தரப்படுத்தப்படாத எடையளவுகள் மற்றும் உரிமம் பெறாமல் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட எடையளவுகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்கண்ட முரண்பாடுகளுக்காக 30 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரி இதுபோன்ற தரப்படுத்தப்படாத எடையளவுகள் மற்றும் உரிமம் பெறாமல் இறக்குமதி செய்யப்பட்ட எடையளவுகள் மற்றும் பொட்டலப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வது தவறு என்றும், இவ்வாறான பொருட்கள் விற்கப்பட்டால் விற்பனையாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். மேலும் இதுகுறித்து பொதுமக்கள் புகார் தெரிவிக்கவேண்டுமெனில் சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலக நிர்வாக அலுவலர் (எடையளவு) அவர்களை 044-24321438, 044-24321525 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**